ஶ்ரீ:

விளம்பி ஞூ வைகாசி மீ

மே - ஜூன் 2018

மலர்: 1

இதழ்: 2

ஶ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஶ்ரீ ஶ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:

ஶ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# தேஶிக ஸந்தேஶம்





MONTHLY NEWSLETTER FROM:

**SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM**

MYLAPORE, CHENNAI, Tel: 044 - 24953799,

Email : svdd.mylai@gmail.com, web: www.svdd.com





விளம்பி ஹூ வைகாசி மீ
மே - ஜூன் 2018

ஸ்ரீ:

மலர்: 1
இதழ்: 2

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# தேஶிக ஸந்தேஶம்

## திருக்கோவில் பூஜா காலங்கள் *

| காலை | | | மாலை | | |
|---|---|---|---|---|---|
| 6.00 மணிக்கு | - | ஸந்நிதி திறப்பு | 4.00 மணிக்கு | - | ஸந்நிதி திறப்பு |
| 6.30 மணிக்கு | - | விஶ்வரூபம் | 8.00 மணிக்கு | - | திருவாராதனம் |
| 8.30 மணிக்கு | - | திருவாராதனம் | 9.00 மணிக்கு | - | ஶயநம் |
| 9.45 மணிக்கு | - | சாற்றுமுறை | | | |
| 12.00 மணிக்கு | - | உச்சி காலம் | | | |

## வியாழன், வெள்ளி, சனி

| காலை | | | மாலை | | |
|---|---|---|---|---|---|
| 6.00 மணிக்கு | - | விஶ்வரூபம் | 4.00 மணிக்கு | - | ஸந்நிதி திறப்பு |
| 7.30 மணிக்கு | - | பொது தரிசனம் | 8.00 மணிக்கு | - | திருவாராதனம் |
| | | | 9.00 மணிக்கு | - | ஶயநம் |

* விசேஷ காலங்களில் மாறுதல் உண்டு

**தர்மகர்த்தாக்கள்:**
1. ஸ்ரீ R. முகுந்தன் 2. ஸ்ரீ P. சேஷாத்ரி 3. ஸ்ரீ N. கஸ்தூரி ரங்கன்

**Editorial Board**
ஸ்ரீ நெல்வாய் ஸௌம்ய நாராயணாசார்யர் ஸ்வாமி - ஆசிரியர்
ஸ்ரீ நாட்டேரி ஸ்ரீஹரி (எ) லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ தள்ளம் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி

Published by: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை-4
Printed by: Abisan Enterprises Chennai - 87, Cell : 95000 45604
Designed: yeSKay



**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்**
மயிலாப்பூர், சென்னை - 600004, போன்: 24953799
Website: www.svdd.com Email: svdd.mylai@gmail.com



ஸ்ரீ:

# ஆசிரியர் விண்ணப்பம்

வேங்கடாத்3ரி ஸமம் ஸ்தா2நம் ப்3ரஹ்மாண்டே3 நாஸ்தி கிஞ்சந |
வேங்கடேஶ ஸமோ தே3வோ ந பூ4தோ ந ப4விஷ்யதி ||

வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள் !

ஒரு செயலின் சிறப்புக்கு, அதன் தொடக்கமே முன்-மாதிரி என்பர். நம் 'தேஶிக ஸந்தேஶம்' மாத இதழின் தொடக்க விழா ஸ்ரீமதழகியசிங்கரின் அநுக்ரஹத்துடனும்; ஸ்ரீரங்கம் பெரியாஶ்ரமத்தின் வாழ்த்துக்களுடனும் பக்த-ஶிகாமணிகளின் பெரும் ஆதரவோடு புத்தாண்டு தினத்தன்று விமரிசையாக நடந்தேறியது. இதைப் பற்றிய தம் கருத்துக்களை ஒரு நேயர், நம்முடன் பகிர்ந்து கொள்கிறார் இம்மாத இதழில். இதே போன்று ஒவ்வொரு மாதமும் திருக்கோயிலின் விழாக்கள் பற்றிய நேயர் அனுபவத்தை வெளியிட, இது நம்மைத் தூண்டுகிறது.

ஒரு நிறுவனத்தின் வெற்றிக்கு தூண்களாக அமைபவர்கள், அதன் கைங்கர்யபரர்கள் (ஊழியர்கள்) முக்கியமாக ஒரு திருக்கோயிலின் எம்பெருமான், ஆசார்யர்களின் மங்களாஶாஸநத்தாலும் / அர்ச்சகர்களின் தன்னலமற்ற தொண்டாலும் வர-ப்ரஸாதியாக விளங்குகிறான். இவ்வூழியர்களின் செயலாற்றலை அனைவரும் அறிந்துகொள்ளும் மற்றும் ஊக்குவிக்கும் வகையிலும், கட்டுரைகளை வெளியிட விழைகிறோம் என்பதை மகிழ்வுடன் பகிர்ந்து கொள்கிறோம்.

முதல் இதழால் ஊக்கமுற்ற பல நேயர்கள், ஸம்ப்ரதாயக் கருத்துக்களை கட்டுரை மூலமாக எங்களுக்கு அனுப்பியிருக்கிறார்கள் - அனைவர்க்கும் எங்களது மனமார்ந்த நன்றி. இவைகளையும், இதழின் பக்கங்களைப் பொருத்து வெளியிட இருக்கிறோம்.

உங்கள் ரஸனைக்கும், அனுபவத்திற்கும் பெரும் தீனியாக வைகாசித் திங்களில் எம்பெருமானின் ப்ரஹ்மோத்ஸவம் / ஸ்வாமி நம்மாழ்வாரின் திருநக்ஷத்ரம் முதலியவை காத்திருக்கின்றன. திறவுங்கள் உங்கள் பக்தி உள்ளங்களையும்/ எழுதுகோலையும்; வரையுங்கள் கட்டுரை வடிவில். பக்தியுடன் பெறுநர்களாக அடியார்களுடன் கூடி நிற்கிறோம்.

ஸ்ரீ:

# விளம்பி வருட வைகாசி மாத பஞ்சாங்கம்

| ஆங்கில | தமிழ் | திதி | வாரம் | நக்ஷத்ரம் | உத்சவம் | உபயதாரர் |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| 15.05.18 | 1 | அமாவாசை | செவ்வாய் | பரணி | மாதப்பிறப்பு | ஸ்ரீ N. ரங்காச்சாரி |
| | | | | | மாலை அங்குரார்ப்பணம் சேனைநாதன் புறப்பாடு | ஸ்ரீ N. சேஷாத்ரி |
| 16.05.18 | 2 | ப்ரதமை | புதன் | கிருத்திகை | அதிவாசம் (கருட ப்ரதிஷ்டை) கருட படம் (த்வஜ படம்) வீதிபுறப்பாடு | ஸ்ரீ A.L ரங்கமணி |
| 17.05.18 | 3 | த்வீதீயை / திருதியை | வியாழன் | ரோஹிணீ | ப்ரஹ்மோத்ஸவம் 17.05.2018 முதல் 26.05.2018 வரை | |
| 27.05.18 | 13 | த்ரயோதசி | ஞாயிறு | சுவாதி | விடாயாற்றி முதல் நாள் திருமஞ்சனம் | ஸ்ரீ P.V. ராகவன் பண்டு ஸ்ரீ மதுதேசிகன், ஸ்ரீ A.G ஸ்ரீநிவாசன் |
| 28.05.18 | 14 | சதுர்த்தசி | திங்கள் | விசாகம் | விடாயாற்றி 2 ஆம் நாள் காலை திருமஞ்சனம் | ஸ்ரீ கௌசிகன் |
| | | | | | வைகாசி விசாகம் நம்மாழ்வார் திருநக்ஷத்ரம் மாலை பெருமாள்,ஆழ்வார் திருவீதி புறப்பாடு | ஸ்.பீ.ர்.பண்டு ஸ்ரீமதி. அம்புஜம் அனந்தராமன் |
| 29.05.18 | 15 | பௌர்ணமி | செவ்வாய் | அநுஷம் | விடாயாற்றி 3 ஆம் நாள் காலை திருமஞ்சனம் இரவு புஷ்ப பல்லக்கு | ஸ்ரீ S. சுந்தரம் |
| 30.05.18 | 16 | ப்ரதமை | புதன் | கேட்டை | தொண்டரடிபொடிகள் | |
| 31.05.18 | 17 | த்வீதீயை | வியாழன் | மூலம் | திருமால்வடை | |
| 01.06.18 | 18 | திருதீயை | வெள்ளி | மூலம் | பெருமாள் மூலவர்,தாயார் மூலவர்-உத்சவர் திருமஞ் சனம், தாயார் உள்புறப்பாடு | ஸ்ரீ S. அருண் |
| 02.06.18 | 19 | சதுர்த்தி | சனி | பூராடம் | சேனைநாதன் | |
| 03.06.18 | 20 | பஞ்சமி | ஞாயிறு | உத்ராடம் | ஆளவந்தார் | |
| 04.06.18 | 21 | ஷஷ்டி | திங்கள் | ச்ரவணம் | பெருமாள், தேசிகன், அலர்மேல்மங்காபுரம் எழுந்தருளல் | ஸ்ரீ T.E. ஸ்ரீநிவாசன் |
| 05.06.18 | 22 | சப்தமி | செவ்வாய் | அவிட்டம் | பூதத்தாழ்வார் | |
| 06.06.18 | 23 | அஷ்டமி | புதன் | சதயம் | ஸ்ரீ பேயாழ்வார் திருமஞ்சனம் - புறப்பாடு | ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீ பாதம் கைங்கர்யம் அசோசியேஷன் |
| 07.06.18 | 24 | நவமி | வியாழன் | பூரட்டாதி | திருமால்வடை | |
| 08.06.18 | 25 | தசமி | வெள்ளி | உத்திரட்டாதி | பெருமாள் மூலவர், தாயார் மூலவர் - உத்சவர் திருமஞ் சனம், தாயார் உள்புறப்பாடு | ஸ்ரீ N. கஸ்தூரி ரங்கன் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 09.06.18 | 26 | ஏகாதசி | சனி | ரேவதி | திருமால்வடை | |
| 10.06.18 | 27 | ஏகாதசி / த்வாதசி | ஞாயிறு | அஸ்வினி | பெருமாள் திருமஞ்சனம் மாலை-வீதிபுறப்பாடு | ஸ்ரீ K. வரதராஜன் |
| 11.06.18 | 28 | த்வாதசி (4.19) / த்ரயோதசி | திங்கள் | பரணி | திருமால்வடை | |
| 12.06.18 | 29 | சதுர்த்தசி | செவ்வாய் | கிருத்திகை | கலியன் | |
| 13.06.18 | 30 | அமாவசை | புதன் | ரோஹிணீ | பெருமாள் திருமஞ்சனம் மாலை-வீதிபுறப்பாடு | ஸ்ரீ N. கஸ்தூரி ரங்கன் |
| 14.06.18 | 31 | ப்ரதமை | வியாழன் | மிருகசிரீஷம் | திருக்கச்சிநம்பிகள் | |


## ஒரு ஸந்தேஹம்

சித்திரை இதழில், 'பாட்டி ஒரு கதை சொல்லேன்' கட்டுரையில், 'இந்த தேஶிகன் யாரு; உம்மாச்சியா?' என பேத்தி கேட்டதற்கு, 'அப்படியும் வைச்சுக்கலாம்' என பாட்டி பதில் சொன்னார். இது எதைக் குறிக்கிறது? பாட்டிக்குத் தெரியாது என்றா ; அல்லது பாட்டிக்கு ஸந்தேஹமா ! குழப்பமாக இருக்கிறதே, என.

பதில் : இரண்டும் இல்லை; பாட்டி அறிந்தே பதில் அளித்தார். அதாவது, தேஶிகனைப் பற்றிய மங்கள ஸ்தோத்ரத்தில், ஸ்ரீவரதாசாரியர் 'வேங்கடேஶ அவதாரோயம், தத் கண்டாம்ஶ: அதவா பவேத் ந யதீந்த்ர அம்ஶ: அதவா இதி ஏவம் விதர்க்யாய...' என்றதை ஒட்டியதாம். பெரியோர்களே இப்படிப் பலவிதமாக தங்களுக்குள் தர்க்கம் செய்துகொண்டு இருக்கிறார்களே!

## வைணவ வழக்கு ஒரு 10 சொல் பழகுவோம்

| | | |
|---|---|---|
| கோஷ்டீ | = | அடியார் குழாம் |
| திருமடைப்பள்ளி | = | சமையல் அறை |
| விநியோகம் | = | பரிமாறுதல் |
| உத்ஸவம் | = | திருவிழா |
| புறப்பாடு | = | உத்ஸவர் வலம் வருதல் |
| தீவட்டி | = | தீப்பந்தம் |
| உபஹாரம் | = | பகவானுக்குப் படைக்கும் பொருள் |
| அத்யாபக கோஷ்டீ | = | ப்ரபந்தம் ஓதுவோர் குழு |
| பாராயண கோஷ்டீ | = | வேதம் ஓதுவோர் குழு |
| திருமஞ்ஜநம் | = | நீராட்டல் |



ப்ரஹ்மோத்ஸவத்திற்கு பந்தல் கால் முஹூர்த்தம்

ஸ்ரீ:

# விளம்பியில் ஓர் விஶேஷ அநுபவம்

(ஸ்ரீமதி மாலதி ராகவன்)



**ஸ்**வாமி தேஶிகனின் 750-வது திருநக்ஷத்திர வைபவத்தை கொண்டாடிக்கொண்டிருக்கும் இம்மஹோன்னத தருணத்தில், ஸ்ரீமத் அழகிய சிங்கரின் அருளாசியுடன் ''பேயர்'' அவதரித்த மாட மாமயிலையில், ஸ்ரீ வேதாந்த தேஶிக தேவஸ்தானத்தில், ஸ்ரீ விளம்பி வருட பிறப்பன்று அவதரித்தது 'தேஶிக ஸந்தேஶம்' என்னும் மாத ஸஞ்சிகை.

'கண்டோம் கண்டோம் கண்டோம் கண்ணுக்கு இனியன கண்டோம்' என்ற ரீதியில் இந்த திவ்ய அவதார வைபவத்தை ஆஸ்திகர்களுடன் பகிர்ந்து கொள்ள விழைகிறேன்.

ஸ்ரீமத் அழகியசிங்கர் வருடப் பிறப்பன்று சுமார் மாலை 6 மணியளவில் ஸ்ரீ தேஶிகர் ஸந்நிதிக்கு மங்கள வாத்தியங்கள் முழங்க ஸ்ரீ ஶடாரி/ தேவஸ்தான மரியாதைகளை யதாக்ரமம் ஸ்வீகரித்துக்கொண்டு, ஆழ்வார்/ ஆசார்யாதிகள், பிராட்டி / எம்பெருமான் மங்களாஶாஸனம் செய்துகொண்டு பின்பு அங்குள்ள மண்டபத்தில், ஸ்ரீ ஸந்நிதி ஸ்ரீகார்யம் ஸ்வாமி, ஆராதகர்கள், வித்வான் ஸ்ரீ அழிசூர் ஸ்ரீநிவாஸாசார்யர், முக்கிய விருந்தினரான ஸ்ரீமான் மோகன் பராஶரன் முதலியோருடன் ஏள்ளியாயிற்று.

அதி ஆஶ்சர்யமான வேதபாராயணத்துடன் துவங்கியது இந்த 'தேஶிக ஸந்தேஶ' வெளியீட்டு வைபவம்.

வரவேற்புரையில் தர்மகர்த்தா ஸ்ரீ முகுந்தன் ஸ்வாமி, ஒரு மாத இதழ் இத்தேவஸ்தானத்தில் வெளியிட வேண்டும் என்ற எண்ணம் ஆசார்யர் அநுக்ரஹத்தால் உதித்ததையும் துரித கதியில், தங்கு தடை இன்றி ஒவ்வோர் நிலையிலும் பிரவேஶித்ததை விவரிக்கையில், எம்பெருமானின் ஆஸ்திக ரக்ஷணத்தின் த்வரையை ஒத்திருந்தது ''தேஶிக ஸந்தேஶ''த்தின் த்வரையும் !!!!

இந்த ஸ்ரீகோஶத்தைப் பற்றிப் பேசுகையில் நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி 'தேஶிகனின் ஸதுபதேஶங்களை ஆஸ்திகர்களிடையே கொண்டுசெல்வது' என்பதை ஸூசிப்பிக்கும் விதமாக 'தேஶிக ஸந்தேஶம்' என்று நாமகரணம் செய்யப்பட்டது என்றும்; அதை சிலர் 'தேஶிக ஸந்தோஷம்' என்றும் 'தேஶிக ஸந்தேஹம்' என்றும் வாசித்ததை விவரிக்கையில் சிரிப்பொலி மண்டபத்தை நிறைத்தது. பெயரின் ஒருபாதி புரிந்தும் மறு பாதி புரியாமலும் இருப்பதே இந்த இதழை வாசிக்க ஒரு உத்வேகத்தை கொடுக்கும் என்றும், இன்னும் இது ஸந்நிதியின் உத்ஸவங்களை விளக்கவும், ஸ்ரீவைஷ்ணவ பரிபாஷையை போதிக்கவும் கருவியாகும் என்றும் விளக்கியது படிக்க விழைவோர்க்கு ஸ்வாரஸ்யத்தை கூட்டியது.

ஸ்ரீமத் அழகியசிங்கர் ஆற்றிய அனுக்ரஹ பாஷணத்திலிருந்து சில முத்துத்துளிகள்:

- நல்ல விஷயத்தை மிக எளிய நடையில் எல்லோருக்கும் புரியும்படி கொண்டு

செல்லும் நோக்கொடு 'எவ்வுள் கிடந்தான்' என்ற நம் திருவள்ளூர் தேவஸ்தான மாத இதழ் போன்றதே இந்த 'தேஶிக ஸந்தேஶம்'.

- 'தேஶிகன்' என்ற சொல்லுக்கு 'தூதுவன்' என்று கூறி, ஜீவனை பெருமானுக்கு அறிவிப்பதால் ஆசார்யன் தூதுவனாகிறான் என விளக்கிச் சொன்னதுடன், 'ஹம்ஸ ஸந்தேஶத்தில்' ராமன் ஹம்ஸத்தை பிராட்டியிடம் தூது அனுப்புவதாக அமைந்ததையும்', ஹனுமான் மற்றும் கண்ணன் தூது போனதையும் உதாஹரித்தாயிற்று.

- சிறிய அளவில் ஆரம்பித்து 'வர்த்ததாம் அபிவர்த்ததாம்' என்ற ரீதியில் மேலும் மேலும் இது வளர வேண்டும் என்று ஆசி கூறியாயிற்று.

- இவ்வருடத்தின் பெயரான 'விளம்பி' யின் பொருளை விளக்குகையில், 'சொல்லுதல்' அதாவது நல்லதை சொல்வது / நல்ல சுபமான வார்த்தைகளைச் சொல்வது என்றும்; பலமாக இவ்வருடத்தில் ஸுபிக்ஷமும், மிதமான மழையும் உண்டென்று பஞ்சாங்கம் சொல்வதை, தானும் மூதலிப்பித்து விஶேஷித்து அனுக்ரஹித்தாயிற்று.

- இவ்விளம்பி வருடப்பிறப்பு முதல் எவரையும் தூஷணம் செய்யாமலும் எவரிடமும் அஸூயை இல்லாமலும் இருக்க வேண்டும்; மத-மாத்ஸர்யம் இன்றி வேதம் சொல்லும் ரீதியில் (முக்கரணங்களாலும்) ஒன்றுபட்ட எண்ணத்துடன் ஒன்றாகப்பேசி, ஒன்றாகவே நடக்க வேண்டியதின் அவசியத்தை அறுதியிட்டதுடன், எப்படி 1970-ல் பார்லிமென்டின் அலுவல்கள், வேத வாக்கியத்தை சொல்லிய பின்பே தொடங்கப் பட்டதையும் பூர்வாஶ்ரமத்தில் ஶ்ரவணம் செய்ததையும் நினைவுகூர்ந்து மிகுந்த வாத்ஸல்யத்துடன் அவ்வேத வாக்கியத்தை ஸாதித்தாயிற்று.

- இந்த புத்தகத்தில், ஒவ்வொருவரும் கர்மானுஷ்டானத்தை இந்த வருடத்திலிருந் தாவது விடாமல் பண்ண வேண்டியதின் அவஶ்யத்தை வலியுறுத்தியும், ஸந்தியா வந்தனம் என்பது மற்ற கர்மாக்களை பண்ணுவதற்கான அஸ்திவாரம் என்றும் அதை செய்யாததால் வரும் தோஷம் நம் ஸந்ததியை பாதிக்கும் என்று ஶாஸ்திரம் சொல்வதாகவும் ஸாதித்த ஸ்ரீமத் அழகிய சிங்கர், புருஷர்களை கர்மாக்களைவிடாமல் செய்ய வைப்பதில் ஸ்திரீகள் உறுதியுடன் இருக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியாயிற்று.

எல்லோரும் எல்லா க்ஷேமத்தையும் அடைய எம்பெருமான் அனுக்ரஹிப்பான் என்று ஆசீர்வதித்ததுடன் தனக்கே உரித்தான க்ருபையுடன் மந்த்ராக்ஷதையை அங்கு திரளாகக் கூடியிருந்த ஶிஷ்யர்களின் ஶிரஸ்ஸில் அள்ளித்தெளித்தபோது ஏற்பட்ட ஸந்தோஷத்தை வர்ணிக்க வார்த்தைகள் இல்லை.

'இதுவரை தேஶிக ஸந்தேஶத்தை காதால் கேட்டோம்; தற்போது கண்ணால் பார்ப்போம்' என்று அர்த்த-புஷ்டியுடன் கூறி, நெல்வாய் ஸ்வாமி இதழ் வெளியீட்டை ஸூசிப்பித்தார்.

ஸ்ரீமத் அழகியசிங்கர் 'தேஶிக ஸந்தேஶ' முதல் இதழை ஸ்ரீமான் மோகன் பராசரன் ஸ்வாமிக்கும் பின் அங்கு வருகை தந்திருந்த வித்வான்களுக்கும் பலமந்த்ராக்ஷதையுடன் அனுக்ரஹித்தாயிற்று.

ஆசார்யன் விடைகொண்டதை அடுத்த எம்பெருமானின் திருவீதிப்புறப்பாடு, அழகிய சிங்கரின் அருளாசி மற்றும் ''தேஶிக ஸந்தேஶ''த்துடன், தேனும் பாலும் கன்னலும் போலத் தித்தித்தது

இத் திவ்ய அனுபவத்தில் மூழ்கித் திளைத்த அடியார்களுக்கு ப்ரஸாதமும் 'தேஶிக ஸந்தேஶமும்' விநியோகிக்கப்பட்டது. ஆஸ்திகர்கள் இந்த ஸ்ரீகோஶத்தின் வக்த்ரு - விஷய - மற்றும் க்ரந்த வைலக்ஷண்யத்தை உணர வேண்டி, மிகவும் ஆதரத்துடன் பெற்றுச் சென்றதைக் காணமுடிந்தது.

தேஶிக ஸந்தேஶத்தை 'ஈன்ற தாயராய்' தேவஸ்தானம் இருக்க, இல்லங்கள் தோறும் அதைவஸிக்க/வாசிக்கச்செய்துநாம்அனைவரும் 'வளர்த்த இதத்தாயர்கள்' ஆவோம்'!!!!

கண்ணுக்கினியன





# தேஶிக ஸந்தேஶம்

## மாத இதழ்
## வெளியீட்டு விழா



ஸ்ரீ:



















வருஷப் பிறப்பு உத்ஸவம்




வஸந்த உத்ஸவம்









ஸ்ரீ:



ஸ்ரீஅலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே ராமானுஜாய நம: ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே
நெடியானே! வேங்கடவா! நின்கோயிலின் வாசல்
அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்
படியாய் கிடந்து உன்பவளவாய் காண்பேனே. பெருமாள் திருமொழி – 4–9

ஶ்ரிய:பதியாய் அவாப்த ஸமஸ்தகாமனாய், அர்ச்சாரூபியாய், அகலகில்லேனிறையுமென்று அலர்மேல்மங்கையுறைமார்பனாய் ஆச்ரிதோஜ்ஜீவனார்த்தம் ஆங்காங்கு கோயில் கொண்டு எழுந்தருளியிருப்பவனும், முதலாழ்வார்கள் மூவரில் ஒருவராகிய, ஸ்ரீபேயாழ்வார் அவதாரஸ்தலமுமாயும், தூப்புல் நிகமாந்த மஹாதேசிகனைக் கொண்டு அனுபவித்து வரும் ஸ்தலமுமாகிய திருமயிலையில் எழுந்தருளியிருப்பவனுமான ஸ்ரீதிருவேங்கடமுடையான் **நாளது விளம்பி வருஷம் வைகாசி மாதம் 03ம் தேதி (17.05.2018) வியாழக்கிழமை முதல் ப்ரஹ்மோத்ஸவம்** ஆரம்பித்து நடத்திக் கொள்வதாக ஸங்கல்பித்துக் கொண்டிருப்பதால், அம்மஹோத்ஸவத்தில் ஆஸ்திக அன்பர்கள் அனைவரும் கைங்கர்யபரர்களாயிருந்து ஸ்ரீதிருவேங்கடமுடையானுடைய க்ருபைக்கு பாத்திரர்களாக ப்ரார்த்திக்கிறோம்.

| | | | |
|---|---|---|---|
| ***11.05.2018*** | வெள்ளிக்கிழமை | மாலை | ***கடை வெள்ளி*** |
| ***17.05.2018*** | வியாழக்கிழமை | காலை | ***த்வஜாரோஹணம்*** |
| ***19.05.2018*** | சனிக்கிழமை | காலை | ***தங்க கருட வாஹனம்*** |
| ***23.05.2018*** | புதன்கிழமை | காலை | ***திருத்தேர்*** |

R.முகுந்தன், P.சேஷாத்ரி, N. கஸ்தூரிரங்கன்
*தர்மகர்த்தாக்கள்*

| **நாள்** | **நேரம்** | **உற்சவ விவரம் மற்றும் உபயதாரர்** |
|---|---|---|
| 14.05.18 (திங்கள்) | இரவு 8 மணி | **செல்வர் உத்ஸவம்**<br>உபயம்: D.N.S Family |
| 15.05.18 (செவ்வாய்) | இரவு 7 மணி | **அங்குரார்ப்பணம் - ம்ருத்ஸங்க்ரஹணம் (சேனைநாதன் புறப்பாடு)**<br>உபயம்: ஸ்ரீ. N. சேஷாத்ரி |
| 16.05.18 (புதன்) | மாலை 6.30 மணி | **அதிவாஸம் - த்வஜபடம் வீதி புறப்பாடு**<br>**த்வஜபட கருட ப்ரதிஷ்டை** உபயம்: ஸ்ரீ. A.L. ரங்கமணி |
| 17.05.18 (வியாழன்) | காலை<br><br>காலை 6 மணி<br>இரவு 7.30 மணி | **த்வஜாரோஹணம்** உபயம்: ஸ்ரீபெரும்புதூர் தட்டை ஸ்ரீ. ஸத்யநாராயணன் (*காலை 4.30 - 5.00 மணி மேஷ லக்னம்)*<br>**பவழக்கால் சப்பரம்** உபயம்: ஸ்ரீ. ரகுபதி & ராம்<br>**ஸிம்ஹ வாஹனம்** உபயம்: ஸ்ரீ. K. வேணுகோபாலன் |
| 18.05.18 (வெள்ளி) | காலை 6.30 மணி<br><br>இரவு 7.30 மணி | **ஹம்ஸ வாஹனம்** உபயம்: எலக்டோரல் போர்டு<br>திருமஞ்ஜனம் உபயம்: ஸ்ரீ. N.S. வரதாச்சாரியார்<br>**ஸூர்யப்ரபை** உபயம்: 1. ஸ்ரீ. N. கஸ்தூரிரங்கன்,<br>2. ஸ்ரீ. R. சுந்தரராகவன் 3. ஸ்ரீமதி ரமாமணி ராஜகோபாலன் |
| 19.05.18 (சனி) | காலை 6.00 மணி<br><br>இரவு 7.30 மணி | **தங்க கருட வாஹனம்**<br>உபயம்: ஸ்ரீ. S. வரததேசிகன் குடும்பத்தினர்<br>**ஹனுமந்த வாஹனம்**<br>உபயம்: 1. ஸ்ரீ. R.வாசுதேவன் 2.ஸ்ரீ. C.கோதண்டம்<br>3. ஸ்ரீமதி சீதா ரங்கநாதன் 4. பிள்ளைபாக்கம் நரஸிம்மராகவாச்சாரி ட்ரஸ்ட் |

| நாள் | நேரம் | உற்சவ விவரம் மற்றும் உபயதாரர் |
|---|---|---|
| 20.05.18 (ஞாயிறு) | காலை 6.30 மணி<br>இரவு 7.30 மணி | **சேஷ வாஹனம்** உபயம்: ஸ்ரீ. M.D. சுதர்சனம் ஐயங்கார் ட்ரஸ்ட்<br>**சந்திர ப்ரபை** உபயம்: M/s. சுந்தரம் சாரிடீஸ் |
| 21.05.18 (திங்கள்) | காலை 5.00 மணி<br>இரவு 7.30 மணி | **நாச்சியார் திருக்கோலம்** உபயம்: ஸ்ரீ. R. முகுந்தன்<br>**யாளி வாஹனம்** உபயம்: ஸ்ரீ. M. கணேசன் |
| 22.05.18 (செவ்வாய்) | காலை 6.30 மணி<br>இரவு 7.30 மணி | **வேணுகோபாலன் திருக்கோலம் (சூர்ணாபிஷேகம்)**<br>உபயம்: ஸ்ரீ. V.C. முரளிதரன்<br>**யானை வாஹனம் - (ஏசல்)** உபயம்: ஸ்ரீ. ராகவாச்சாரியார் குடும்பத்தினர் |
| 23.05.18 (புதன்) | காலை<br>இரவு 7.30 மணி | **திருத்தேர்** *காலை 4.00 - 4.45 மணி மேஷ லக்னம்*<br>காலை 7.00 மணிக்கு புறப்பாடு<br>உபயம்: ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்யம் அசோஸியேஷன் (பதிவு)<br>**தங்கக்கேடயம் (தோட்ட உத்ஸவம்)** உபயம்: ஸ்ரீ. K.ரங்கநாதன் |
| 24.05.18 (வியாழன்) | மதியம் 3 மணி<br>இரவு 7.30 மணி | **திருப்பாய்ந்தாடு திருமஞ்ஜனம்**<br>உபயம்: 1. ஸ்ரீ பத்மாவதி கைங்கர்ய ஸபா<br>2. திருக்கண்ணமங்கை ஸ்ரீ. S. சுந்தரராஜன் ஐயங்கார் பண்டு<br>**குதிரை வாஹனம்** உபயம்: 1. ஒலக்கூர் ஸ்ரீ. ராஜகோபாலன் குடும்பத்தினர்<br>2. ஸ்ரீமதி நிர்மலா J. ஸ்ரீநிவாஸன் 3. ஸ்ரீ. K. ராமன் |
| 25.05.18 (வெள்ளி) | காலை 6.30 மணி<br>இரவு 7.30 மணி | **ஆள்மேல் பல்லக்கு (மட்டையடி மஹோத்ஸவம்)**<br>**தீர்த்தவாரி** உபயம்: 1. ஸ்ரீ. S.R. ஜெகந்நாதன் 2. ஸ்ரீ. T.P. பத்மநாபன்<br>**ஆனந்த நிலைய விமானம்**<br>உபயம்: ஸ்ரீ. T. நாராயணன் & ஸ்ரீ. S. நாராயணன் |
| 26.05.18 (சனி) | காலை 8.30 மணி<br>மதியம் 2 மணி<br>இரவு 7.30 மணி<br>இரவு 10 மணி | **திருமஞ்ஜனம்** உபயம்: TCN Trust<br>**த்வாதச ஆராதனம்** உபயம்: ஸ்ரீ. R. கோபாலசாமி ஐயங்கார்<br>**வெட்டிவேர் சப்பரம்** உபயம்: வனபோஜனம் ட்ரஸ்ட்<br>**த்வஜ அவரோஹணம்** |
| (பிரதி தினம் காலை 9:30 மணிக்கு திருமஞ்ஜனம், மாலை 6:00 மணிக்கு பத்தி உலாத்தல், நடைபெறும்) | | |

| விடையாற்றி உத்ஸவம் | | |
|---|---|---|
| 27.05.18 (ஞாயிறு) | மாலை 4 மணி | **திருமஞ்ஜனம்**<br>உபயம்: 1.ஸ்ரீ. உ.வே. பி.வி.ராகவன் பண்டு (ஸ்ரீ. மதுதேசிகன் குடும்பத்தினர்)<br>2.ஸ்ரீ. A.G. ஸ்ரீனிவாசன் |
| 28.05.18 (திங்கள்) | காலை 10 மணி | **திருமஞ்ஜனம்**<br>உபயம்: ஸ்ரீ. கௌசிகன் |
| 29.05.18 (செவ்வாய்) | காலை 10 மணி<br>இரவு 7 மணி | **திருமஞ்ஜனம்**<br>**புஷ்ப பல்லக்கு** உபயம்: ஸ்ரீ. S. சுந்தரம் |

**Note:** 1. CONTRIBUTIONS, IF ANY, CAN BE MADE BY WAY OF CASH OR CHEQUE (in favour of Sri Vedantha Desikar Devasthanam)
2. In order to ensure frequent and speedier communication, please furnish your email ID. Please ignore if you have already sent.
3. Please also note that all your future correspondence will also be sent through email or SMS.



ஸ்ரீ பாஷ்யகாரர் உத்ஸவம்













சித்ரா பௌர்ணமி உத்ஸவம்



அவதார உத்ஸவம்











மதுரகவி ஆழ்வார் சாற்றுமுறை


## தோட்ட உத்ஸவம்







## சித்திரை ச்ரவண உத்ஸவம்







# நிறைந்த பாண்டித்யம் நிகரில்லா கைங்கர்யம்

**ஸ்ரீ உ. வே. மஹாவித்வான் அழிசூர் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியுடன்** ஒரு சந்திப்பு

ஸ்ரீ உ.வே. நாட்டேரி ஸ்ரீஹரி ஸ்வாமி


*க்ருதே நாரஸிம்ஹோபூ: த்ரேதாயாம் ரகுநந்தந:!*
*த்வாபரே வாஸுதேவஶ்ச கலௌ வேங்கடநாயக:!!*

எந்த யுகத்தில் எந்த எம்பெருமானை ஸேவித்தல் மிகத்தகும்? ‘‘க்ருத யுகத்தில் நரஸிம்ஹர், த்ரேதாயுகத்தில் ஸ்ரீராமர், த்வாபரத்தில் க்ருஷ்ணர், கலியில் வேங்கடவன்’’ என்று இந்த ப்ரமாண ச்லோகம் கூறுகின்றது. இதற்கேற்ப, திருமலை ஸ்ரீநிவாஸனே நம் திருமயிலை ஸ்ரீ வேதாந்த தேசிகன் ஸந்நிதியில் எழுந்தருளியிருந்து நம்மைக் காத்தருள்கின்றான்.

அர்ச்சகஸ்து ஹரி: ஸாக்ஷாத் சர ரூபி ந ஸம்சய:! ‘‘அர்ச்சகரானவர் ஸாக்ஷாத் ஹரியைப் (எம்பெருமானைப்) போன்றவர், இதில் ஸந்தேஹம் இல்லை’’ என்று சாஸ்த்ரம் கூறுகிறது. இதற்குக் கண்கூடான சான்று, நம் திருமயிலை ஸ்ரீ ஸ்ரீநிவாஸப் பெருமாள் ஸ்ரீ வேதாந்த தேசிகன் ஸந்நிதியில் 25 ஆண்டுகளுக்கு மேலாக கைங்கர்யம் செய்து வந்து, இன்றளவும் விசேஷ உத்ஸவங்களை நடத்தித் தரும் மஹாவித்வான் அழிசூர் ஸ்வாமி என்றால் அது மிகையல்ல. இவரது திருநாமமும் (பெயரும்) பெருமாளைப் போல ‘ஸ்ரீநிவாஸரே’ என்பது சாலப் பொருத்தம் அன்றோ!

ந்யாய, வேதாந்த, தர்ம சாஸ்த்ரங்களிலும், பாஞ்சராத்ர ஆகமத்திலும் நிபுணரான ஸ்ரீ உ.வே. அழிசூர் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமிக்கு அறிமுகம் தேவையில்லை. ‘ராகவ ஸிம்ஹம் ப்ரஸ்’ மூலமாகவும் பாகவதர்களுக்குத் தொண்டாற்றி வரும் இவரை வைணவ உலகில் அறியாதவர்கள் இருக்க முடியாது என்றாலும், கட்டுரையின் தேவையைக் கருத்தில் கொண்டு சுருக்கமாகச் சில வரிகள்.

ஸ்ரீ அஹோபில மடம் ஆஸ்தான வித்வானான இந்த ஸ்வாமி, ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் ஆச்ரமம், ஸ்ரீ பரகால மடம் முதலான பல ஸம்ப்ரதாய ஸ்தாபனங்களின் விருதுகளைப்



பெற்றவர். தமது 92 வயதிலும், இளைஞர்களை விஞ்சுமளவில் இறைப்பணியில் பலபடியாக ஈடுபட்டிருப்பவர். கோயில் கைங்கர்யங்கள் தவிர, காலக்ஷேபங்கள் ஸாதித்தல், நூல்களை எழுதி வெளியிடுதல் என்று அல்லும் பகலும் எம்பெருமானின் நினைவிலும் செயலிலும் திளைத்திருப்பவர்.

திருக்கச்சி நம்பிகளின் திருநக்ஷத்ரமான மாசி ம்ருகசீர்ஷ நன்னாளில் அவதரித்த இந்த ஸ்வாமி, அந்த ஆசார்யர் எப்படி தேவப்பெருமாளிடம் கைங்கர்ய சீலராயும் அந்தரங்க பாவத்துடனும் எழுந்தருளியிருந்தாரோ, அவ்வாறே திருமயிலை ஸ்ரீநிவாஸனிடத்தில் தொண்டு புரிந்து கொண்டிருக்கிறார்.

ஏறத்தாழ 45 வருடங்களாக நம் கோயிலின் சரித்திரத்தில் பிணைந்திருக்கும் அழிசூர் ஸ்வாமி, நம் ஸம்ப்ரதாயத்தின் பெரும் தூணாக விளங்குகின்றார். வைகுண்ட வாஸிகளான நம் ஆலயத்தின் அர்ச்சகர்கள் நெல்வாய்

நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி, நாவல்பாக்கம் (சூளை) ராகவாசார்ய ஸ்வாமி, ஓங்கூர் ஸ்வாமி போன்றோருடன் கைங்கர்யம் செய்து இவர் பெற்ற அநுபவங்கள் பல. பிறகு பல வருடங்கள் அழிசூர் ஸ்வாமியும் நாவல்பாக்கம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியும் (ஸ்ரீ ராஜாமணி பட்டர்) ஒன்றாகக் கைங்கர்யம் செய்து சிறப்பித்தார்கள்.

'ஆகமத்தின் ஆலயம்' என்று கொண்டாடும் படியான நம் அழிசூர் ஸ்வாமியை சந்தித்து உரையாடி, ஸ்ரீவைஷ்ணவம், கோயில்களில் வழிபாட்டு முறைகள், உத்ஸவங்கள், நம் கோயிலுக்கு இவர் ஆற்றிய பணிகள் போன்ற விஷயங்களில் இவர் கூறிய அரிய கருத்துகளை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

***மஹாவிஷ்ணுவிற்கு ஆலயங்களில் ஆராதநம் செய்யும் முறைகள் யாவை?***

*வைணவக் கோயில்களில் பாஞ்சராத்ரம், வைகாநஸம் இவற்றில் ஒன்றில் பூஜை முறை அமைந்துள்ளது.*

***பாஞ்சராத்ரம்:*** *ஸ்ரீமந் நாராயணனே நர-நாராயண ரிஷிகளாக அவதாரம் செய்து, சாண்டில்யர், உபகாயனர், மௌஞ்ஜயனர்,*



*கௌசிகர், பரத்வாஜர் ஆகிய ஐந்து ரிஷிகளுக்கு ஐந்து இரவுகளில் உபதேசம் செய்த சாஸ்த்ர வாக்யங்களைக் கொண்டு ஆராதநம் செய்வது 'பாஞ்சராத்ரம்' எனப்படும் முறையாகும். பகவானே அருளிச்செய்ததனால் இதற்கு 'பகவத் சாஸ்த்ரம்' என்று பெயர். 'தீக்ஷை' என்னும் உபதேச முறை இதற்கு இன்றியமையாதது ஆகும்.*

***வைகாநஸம்:*** *விஷ்ணுவின் அம்சமாகக் கருதப்படும் விகநஸர் என்னும் ரிஷி, வேத வாக்யங்களைக் கொண்டு அமைத்த வழிபாட்டு முறையே 'வைகாநஸம்' என்பதாகும். இது பரம்பரையாக வருவதாகும்.*

***இவற்றில் எது சிறந்தது?***

*ஸ்வாமி நிகமாந்த மாஹாதேசிகன், சரணாகதி தீபிகை என்கிற ஸ்தோத்ரத்தில் பாஞ்சராத்ரம், வைகாநஸம் ஆகிய இரண்டையும் ப்ரமாணம் என்று அருளியுள்ளார். ஆகவே, இவ்விரண்டு முறைகளும் சிறந்தவையே.*

***கோயில்களில் எந்த இடத்தில், எந்த முறையில் ஸேவிக்க வேண்டும்?***

*எப்பொழுதும் பெருமாளுக்கு வலது பக்கத்திலிருந்து, பலி பீடத்திற்கு எதிரில் ஸாஷ்டாங்கமாக நான்கு முறைகள் ஸேவிக்க வேண்டும் என்று சாஸ்த்ரம் கூறுகின்றது. அதாவது, பொதுவாக பெருமாள் கிழக்கு நோக்கி எழுந்தருளியிருந்தால், தெற்கிலிருந்து வடக்கு முகமாக ஸேவிக்க வேண்டும். வேறு திசையை நோக்கி பெருமாள் திருமுக மண்டலம் இருந்தாலும், எம்பெருமானின் வலது பக்கத்தி லிருந்தே நமஸ்காரம் பண்ண வேண்டும்.*

***ஒரு கோயிலில் ஸாந்நித்யம் (புனிதத் தன்மை) என்பது எவ்வாறு அமைகிறது?***

*சிறந்த முறையிலான திருவாராதநம், ஆசாரமானமுறையில்மடைப்பள்ளியில்சுத்தமாகச் செய்யப்படும் தளிகைகளை நிவேதநம் செய்தல், உரிய காலங்களில் திருமஞ்ஜநம், உத்ஸவங்கள் நடைபெறுதல், பாகவத ச்ரேஷ்டர்களின்*

**பஞ்ச பர்வம் என்றால் என்ன?**

ஏகாதசி, அமாவாஸை, பௌர்ணமி, மாதப் பிறப்பு மற்றும் எம்பெருமானின் அவதார திருநக்ஷத்ரம் — இவை ஐந்தும் மாதம் தோறும் நடைபெறும் பஞ்சபர்வ உத்ஸவங்களாகும். இந்த தினங்களில் முன்னதாக காலையில் பெருமாளுக்குத் திருமஞ்ஜனம் செய்து வைப்பது மிகவும் அவச்யமானதாகும். பிறகு பெருமாள் மாலையில் திருவீதி புறப்பாடு கண்டருள்வார்.

அவதார திருநக்ஷத்ரம் என்பது, அந்தந்த கோயிலில் எழுந்தருளியுள்ள பெருமாளுக்கு அவதார தினத்தின் (ப்ரதிஷ்டை செய்த நாளின்) நக்ஷத்ரம் எதுவோ அதனைக் குறிக்கும். அதன் படி நம் ஸ்ரீநிவாஸப் பெருமாளுக்கு அவதார நக்ஷத்ரம் ஹஸ்தம் ஆகும்.

அதேபோல் தாயாருக்கு வெள்ளிக் கிழமைகளிலும் உத்ர நக்ஷத்ரத்திலும் காலை திருமஞ்ஜனம் மற்றும் மாலை உள் புறப் பாட்டுடன் உத்ஸவங்கள் நடைபெறுகின்றன.

மங்களாசாஸநம்போன்றவற்றால் புனிதத் தன்மை சிறப்படைகிறது.

**பெருமாள், தாயாருக்கு எந்த அர்ச்சனைப் பொருள்களை எடுத்துச் செல்ல வேண்டும்?**

பத்ரம் புஷ்பம் பலம் தோயம் யோ மே பக்த்யா ப்ரயச்சதி |

தத் அஹம் பக்தி உபஹ்ருத்தாம் அஸ்நாமி ப்ரயதாத்மந: ||

என்று பகவத் கீதையில் (9.26) ஸ்ரீ கண்ணன் ஸாதிக்கின்றான்.

''ஒருவன் பக்தியுடன் இலை, பூ, பழம், தீர்த்தம் இவற்றை ஸமர்ப்பித்தால் நான் ஏற்றுக்கொள்கிறேன்''.

எனவே பழங்கள், புஷ்பங்கள் இவை அர்ச்சனைக்கு ஏற்றவை. மேலும், எம்பெருமான் திருத்துழாயை மிகவும் உகந்து அணிந்து கொள்வதனால், துளஸீ மாலை விசேஷமாகும். கோயிலில் நெய் விளக்கு ஏற்றுவது மிகவும் சிறந்ததாகும்.

**இத்தனை வருடங்கள் இந்த எம்பெருமானிடத்தில் கைங்கர்யம் செய்ததில் இக்கோயிலுக்கு தங்களின் முக்கியப் பங்களிப்பாக எவற்றைச் சொல்லலாம்?**

- 1975, 1995, 2013 ஆகிய வருடங்களில் மூன்று ஸம்ப்ரோக்ஷணங்களை நடத்தி வைத்தது.
- பெருமாள், தாயாருக்கு 1970-களில் கல்யாண உத்ஸவம் ஆரம்பித்து தொடர்ச்சியாகப் பண்ணிவைத்து முறைப்படுத்தியது.
- ஹயக்ரீவர், திருக்கச்சி நம்பிகள் விக்ரஹங்களை ப்ரதிஷ்டை பண்ணியது.
- பல கால் சிறந்த முறையில் பெருமாளுக்கும் தாயாருக்கும் ஸஹஸ்ரகலசாபிஷேகம் மற்றும் லக்ஷார்ச்சனை உத்ஸவங்கள் செய்து வைத்தது.



தாயார் அலர்மேல்மங்கைக்கு தங்கத்தில் ஸ்ரீ சடாரி ப்ரதிஷ்டை, 2005

- திருமலை ஸ்ரீநிவாஸனுக்கு இருப்பது போல் நம் திருமயிலை ஸ்ரீநிவாஸனுக்கு ஸம்ஸ்க்ருதத்தில் ஸுப்ரபாதம் அருளிச் செய்திருப்பது.
- பெருமாள், தாயாருக்கு பஞ்சபர்வ உத்ஸவங்களுக்கு உபயதாரர்களை ஏற்பாடு செய்து முறைப்படுத்தியது.
- 1997-ம் வருடம் கோயிலில் நகைகள் களவு போன போது அயராது பாடுபட்டு அவற்றை மீட்க உதவியதுடன், உபயதாரர்கள் மூலம் புதிய திருவாபரணங்களைச் செய்வித்தது.
- முக்கியமாக, முதல் முதலில் பெருமாளுக்கு தங்கத்தில் ஸ்ரீ சடாரி ப்ரதிஷ்டைக்கு முன்னின்று உதவியது.
- நகைகள் மீட்கப்பட்ட பின்பு, தோஷ நிவர்த்திக்காக ஒரு மண்டலம் (40 நாட்கள்) சக்கரத்தாழ்வாருக்குத் திருமஞ்ஜனமும் ஐந்து நாட்கள் சாந்தி ஹோமமும் செய்து வைத்தது.
- பெருமாளுக்கு, திருவாராதனத்தில் அவசியம் செய்யப்பட வேண்டிய 'மாத்ரா தாநம்' என்னும் உபசாரத்தை இக்கோயிலில் ஆரம்பித்து நடத்தி வைத்தது.
- நித்யபடி கோஷ்டியில் தீர்த்தம், ஸ்ரீ சடாரியுடன் ப்ரஸாத விநியோகமும் நடைபெற ஏற்பாடு செய்தது.
- 2013 ஸம்ப்ரோக்ஷணத்தின் போது, பெருமாள், தாயார் ஸந்நிதிகளிலும் த்வாரபாலகர்களை ப்ரதிஷ்டை செய்தது.
- கோயிலை ஒட்டி தாம் வஸித்த க்ருஹம் இருந்த இடத்தில் தோட்டம் அமைத்து அதில் வஸந்த மண்டபம் கட்டி, பெருந்தேவித் தாயாருக்கு நடைபெறுவது போல் நம் அலர்மேல்மங்கைத் தாயார் அங்கு எழுந்தருளி வெள்ளிக்கிழமை உத்ஸவம் கண்டருளுவதற்கு வித்திட்டது.
- தாயார் தீர்த்தபேரரை (செல்வர் தாயாரை) ப்ரதிஷ்டை செய்தது.
- சில வருடங்களுக்கு முன் ஆரம்பித்து, ஆனி மாதத்தில் கோயிலில் ஸுதர்சந ஹோமம் நடத்தி வருவது.

**கோவிலுக்கு வரும் பக்தர்கள் எந்த பெருமாளிடத்தில் எந்த ப்ரார்த்தனையை முன் வைப்பது பொருத்தம்?**

நம் கோயிலில், பெருமாள், தாயார், ஆசார்யரான ஸ்வாமி நிகமாந்த தேசிகன், என எல்லோரும்

## அவதார உத்ஸவம் - பெருமாள், தாயார் ப்ரதிஷ்டை

வைணவத்தில் மிகப்பெரிய ஆசார்யராகப் போற்றப்படும் ஸ்ரீ ராமாநுஜர் வழிவந்த, அவரை அடியொற்றிய சிறந்த ஆசார்யரான ஸ்ரீ வேதாந்த தேசிகனுக்காக, இன்றைக்கு சுமார் மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னர் இங்கு கோயில் கட்டி அவரை ப்ரதிஷ்டை செய்தனர் நம் முன்னோர்கள். ஸ்வாமி தேசிகன், திருமலை வேங்கடவனுடைய திருமணியின் அவதாரமாக விளங்கியவர். 'திருமலை மால் திருமணியாய் சிறக்க வந்தோன் வாழியே!' என்று வாழி திருநாமம் இட்டுக் கொண்டாடப்படும் அந்த ஆசார்யருக்கு மிகவும் உயர்ந்த முறையில் பூஜைகள், உத்ஸவங்களையும் நடத்தி வந்தனர்.

இருநூறு வருடங்கள் கடந்த நிலையில், அந்தத் திருமலையப்பன் தானே திருவுள்ளம் கொண்டு இத்திருக்கோயிலில் தன்னுடைய தோன்றலான ஸ்ரீ தேசிகனுக்கு நடைபெறும் வைபவங்களை எப்பொழுதும் கண்டு களிப்பதற்காக, இங்கு எழுந்தருளினார்.

புதிதாக விக்ரஹ ப்ரதிஷ்டை பண்ணும் போது, தீர்த்தமும் ஸ்ரீ சடாரியும் ஒரு திவ்யதேசத்திலிருந்து எழுந்தருளப் பண்ணிக்கொண்டு வருவது ஸம்ப்ரதாயத்தில் வழக்கம். அவ்வாறு, 1924-ல் காஞ்சி ஸ்ரீ பேரருளாளன் ஸந்நிதியிலிருந்து தீர்த்தம், ஸ்ரீ சடாரியுடன் வைகாசி மாதம் ஹஸ்த நக்ஷத்ரத்தில் ஸ்ரீநிவாஸப் பெருமாள் இக்கோயிலில் எழுந்தருளி மஹாஸம்ப்ரோக்ஷணம் நடைபெற்றது.

பின்னர், வைகாசி ஹஸ்தத்தன்று தீர்த்தவாரி என்று நிர்ணயம் செய்யப்பட்டு ப்ரஹ்மோத்ஸவம் தொடங்கப்பெற, அது முதல் அவதார உத்ஸவமானது சித்திரை ஹஸ்தத்தில் கொண்டாடப்பட்டு வருகிறது. வரதராஜப் பெருமாளின் அவதார தினமும் சித்திரை ஹஸ்தம் தான் என்பது குறிப்பிடத்தக்கது.



ஸ்ரீ ஹயக்ரீவர் லக்ஷார்ச்சனை, 2012

*வரப்ரஸாதி, அதாவது, பக்தர்கள் வேண்டுவன எல்லாவற்றையும் உடனே நிறைவேற்றுபவர்கள் என்பது நாம் அனைவரும் அறிந்த உண்மை.*

*குறிப்பாகச் சொல்வதானால், குழந்தைகளின் கல்வி என்று எடுத்துக் கொண்டால் ஹயக்ரீவரிடத்தில் வேண்டிக்கொண்டால் அது நிறைவேறும். ஸ்ரீ வேதாந்த தேசிகனும் கருடனிடம் மந்த்ர உபதேசம் பெற்று, முதல் முதலில் ஜ்ஞாநத்தின் வடிவான ஹயக்ரீவரை ஜ்ஞாநாநந்தமயம் தேவம் என்று தொடங்கி 33 ச்லோகங்களால் (ஸ்ரீ ஹயக்ரீவ ஸ்தோத்ரம்) துதி செய்தார். ஹயக்ரீவருக்கு ஏலக்காய் மாலை சாற்றுவது விசேஷமாகும். நம் கோயிலில் ஐந்தாறு வருடங்க்களாக பிப்ரவரி மாதத்தில் ஸ்ரீ ஹயக்ரீவருக்கு நடைபெறும் 'வித்யா அபிவ்ருத்தி அர்ச்சனை' மிக ப்ரஸித்தம் ஆகும்.*

*அதே போல், வ்யாதிகள் நீங்கவும், நினைத்த காரியத்தில் வெற்றி உண்டாகவும் ஸ்ரீ ஸுதர்சந ஆழ்வாரிடம் (சக்கரத்தாழ்வாரிடம்) வேண்டிக் கொண்டால் பலிதம் ஆகும்.*

*செவ்வாய்க்கிழமை லக்ஷ்மீநரஸிம்ஹருக்கும், வியாழக்கிழமை ஹயக்ரீவருக்கும், சனிக்கிழமை சக்கரத்தாழ்வாருக்கும் திருமஞ்ஜனம், அர்ச்சனை செய்வது மிகவும் விசேஷமாகும்.*

***நிறைவாக, கோயிலில் செய்யக் கூடியன மற்றும் செய்யக் கூடாதன யாவை?***

*கோயிலுக்கு வரும் போது பாரம்பரியமான உடையணிந்து வர வேண்டும். முடிந்த வரையில் பழம், புஷ்பம், திருத்துழாய், என்று ஏதாவது பூஜை த்ரவ்யங்களை ஸமர்ப்பிக்க வேண்டும். நமக்குத் தெரிந்த பாசுரங்கள், ச்லோகங்கள் இவற்றை பக்தியுடன் மெதுவாகச் சொல்லலாம். தேவையற்ற பேச்சு, உரக்கப் பேசுதல் இவை தவிர்க்கப்பட வேண்டும். குறிப்பாக, கைபேசி பயன்படுத்துவது கூடாது.*

**நிறைந்த பாண்டித்யமும் நிகரில்லா கைங்கர்யமும் ஒருங்கே சிறக்கப்பெற்ற அழிசூர் ஸ்வாமியின் கருத்துக்களில் அநுபவத்தின் முதிர்ச்சி அழகாய் மிளிர்கிறது. பல பணிகளுக்கிடையில் இந்த நேர்க்காணலுக்காக நேரம் அளித்ததற்கு, ஸ்வாமிக்கு அடியோங்களின் தந்யவாதங்கள். இந்தக் கட்டுரை எல்லோருக்கும் பயனுள்ளதாய் இருக்கும் என்ற நம்பிக்கையுடன் நிறைவு செய்கிறோம்.**

ஸ்ரீ:

## சிறுவர்க்காக

# பாட்டீ! ஒரு கதை சொல்லேன்...

**பங்கஜம் பாட்டி:** வேங்கடேஶன் பொறந்தது, அவா அப்பா-அம்மா, தாய்-மாமாவான அப்புள்ளார் எல்லார்க்கும் ரொம்ப ஸந்தோஷம். கொழந்தைக்கு உரிய காலத்தில ஜாத-நாமகரண-அன்னப்ராஶன-அக்ஷராப்யாஸ-சௌளம் முதலிய ஸம்ஸ்காரங்களை செய்துவைத்தனர்.

**ஸுமதி :** பாட்டீ ! நீங்க இதச் சொல்லச்சே, நேக்கு பெரியாழ்வாரோட 'வண்ணமாடங்கள்' பதிகம் கண்முன்ன வரது.. அது ஸரி, 'ஸம்ஸ்காரம்'-னு சொன்னேளே; அப்படீன்னா என்ன?

**பங்கஜம் பாட்டி:** அப்படீன்னா, 'ஶாஸ்த்ரத்-ல விதிக்கப்பட்ட சடங்குகளச் செய்து, ஒருவரின் அறிவையும்-அனுபவத்தையும் வளர்ப்பது / மேற்கொண்டு கர்மாக்களைச் செய்ய தகுதி உண்டாக்குவது'-னு அர்த்தம்.

வேங்கடேஶனோட மாமா அப்புள்ளார், 'நடாதூர் அம்மாள்' என்று கௌரவிக்கப்படும் வரதாசாரியர்-ன்ற ஆசார்யர்கிட்ட காலக்ஷேபம் பண்ணிண்டு வரச்சே, ஒரு நாள் மருமான் வேங்கடேஶனையும் அங்கு அழச்சுண்டு போனார்....

**ஸுமதி:** பாட்டீ ! குறுக்க கேக்கர்த்துக்கு மன்னிசுக்கோங்கோ - இரண்டு ஸந்தேஹம் : புருஷாளைப் போய், 'அம்மாள்'-னு சொல்வாளா ! காலக்ஷேபம்-னா என்ன?

**பங்கஜம் பாட்டி:** அதுவா, அது ஒரு குட்டி சரித்ரம் - வரதாசார்யர், காஞ்சீ தேவப்பெருமாளுக்கு ராத்ரீ ஶயநத்தும்போது, க்ஷீர-ஆலவட்ட (பால்-விசிறி) தொண்டு செய்வாராம்; ஒரு ஸமயம், பால் மிகவும் சூடாக இருப்பதைக் கண்ட வரதாசார்யர், எம்பெருமான் நாக்கு-வாய் வெந்துவிடுமே என அஞ்சி, அதை ஆற்றி-பொறுக்கும் சூட்டில் கண்டருளப் பண்ணாராம். ஒரு தாய், குழந்தைக்குப் பால் புகட்டும்போது காட்டும் பரிவல்லவா இது! இதைக் கண்ட தேவப்பெருமாள், அவரைப் பார்த்து 'என் அம்மாளோ!' என நெகிழ்ந்தாராம். அது முதற்கொண்டு வரதாசார்யருக்கு, நடாதூர் அம்மாள்' என்ற பெயரே நிலைத்துவிட்டது.

இரண்டாவது, 'காலக்ஷேபம்'னா என்ன ? -னு கேட்டே. வடமொழிச் சொல்லான இதுக்கு அகராதியிலே பொருள் கெடயாது; இது ஒரு வைணவ-வழக்குச் சொல். இதற்கு 'காலக்-கழிவு' என்பது நேர்ப்பொருள். உள்-பொருளோ, 'காலத்தை உபயோகமாக வேதாந்த-மந்த்ர அர்த்தங்களை முறைப்படி ஆசார்யரிடமிருந்து கற்பதிலேயே செலவிடுவது' என்பதாம்.

**ஸுமதி:** நன்னா புரிஞ்சுது பாட்டீ ; வேங்கடேஶன் கதையைச் சொல்லுங்கோ.

**பங்கஜம் பாட்டி:** உம்.. மாமாவோடப் போகச்சே, அது காலக்ஷேபம் நடந்த்ருண்ட ஸமயம்;

ஆசார்யர் அம்மாள், நெறடான ஒரு விஷயத்தை ஸாதித்துக்கொண்டிருந்தார். அப்புள்ளாரும்-வேங்கடேஶனும், ஆசார்யரையும் / காலக்ஷேப கோஷ்டியையும் தண்டமிட்டனர். கவனம் திரும்பிய ஶிஷ்யர்கள், இக்குழந்தையைப் பார்த்தார்கள். திருவேங்கடமுடையானின் அம்ஶமாயிற்றே - குணங்களையும் மஹிமையையும் முந்துறக் காட்டும் திருமேநி / பார்ப்பவர்கள் மனதைக் கொள்ளைகொள்ளும் லாவண்யம்; மெய்மறந்து போனார்கள். வழக்கமான வரவேற்புக்குப் பிறகு, அம்மாள் ஶிஷ்யர்களைப் பார்த்து, 'விஷயத்தை எங்கு விட்டோம்?' எனக் கேட்டார். மேய்கை மறந்த அவர்கள், மௌனமாயினர். அப்போது குழந்தை வேங்கடேஶன் தன் மழலை மொழியால், விட்ட இடத்தை சுட்டிக்காட்டினாராம். அனைவர்க்கும் ஆச்சர்யம்.

**ஸுமதி:** மெய் சிலிர்க்கறது பாட்டீ! போகிற போக்கில, நெறடான விஷயத்த, அதுவும் ஒருமுறை கேட்டத, திருப்பிச் சொல்ற கொழந்தை, நிச்சயமாக 'தெய்வக் கொழந்தை'தான்.

**பங்கஜம் பாட்டி:** ஆசார்யரும் ரொம்பவும் மகிழ்ந்து, ''இக்குழந்தை எதிர்காலத்தில், மற்ற பொய் மதங்களை வென்று, வேதாந்த ஶாஸ்த்ரத்தை நிலை நிறுத்தி, அறிஞர்களின் நன்மதிப்பைப் பெற்று எல்லா நலன்களையும் பெறுவானாக!'' என ஆசீர்வதித்தார். இத்தை நெனச்சுத்தான், ஸ்ரீ நயினாராசார்யர் 'யோ பால்யே வரதார்யஸ்ய ப்ராசார்யஸ்ய பராம் தயாம் ந அவாப்ய வ்ருத்திம் கமித: தஸ்மை யோக்யாய..' என மங்களம் பாடினார்.

**ஸுமதி:** பாட்டீ! பாட்டீ!! நீங்க சொல்லிக் குடுத்த தேஶிகன் மங்களத்தை தினமும் ஸேவிக் கிறேனோல்யோ; இனிமே இந்த வரிகளை ஸேவிக்கும்போதெல்லாம், இந்த சரித்ரம் ஞாபகத் துக்கு வரும் - நல்ல இனிமையான அநுபவம் பாட்டீ!

**பங்கஜம் பாட்டி:** ஸந்தோஷம். மேலே கேளு - இப்படிப்பட்ட கொழந்தைக்கு, தானே எல்லாத்தையும் சொல்லித்தரணும்-னு அம்மாளுக்கு ஆசை; ஆனா அவருக்கு ரொம்ப வயஸாயிடுத்து. அதனாலே, தன் ஶிஷ்யரும் / மாமாவும் ஆன அப்புள்ளாரிடம், குழந்தைக்கு உரிய வயஸ்-லே எல்லாத்தையும் நீயே சொல்லிக்குடு-னு ஆணையிட்டார். அவரும் தக்க காலத்துல, வேங்கடநாதனுக்கு உபநயநம் / பஞ்சஸம்ஸ்காரம் முதலியன செஞ்சு, வேதம்-திவ்ய ப்ரபந்தங்கள்-தர்க்கம்/ வ்யாகரணம் போன்ற ஶாஸ்த்ரங்களையெல்லாம் சொல்லிக் குடுத்தார்.

அப்பறம், வேதாந்த/ ரஹஸ்ய ஶாஸ்த்ரங்களையும் போதித்தார்; மேலும், தமக்கு பரம் பரையாக வந்த 'கருட மந்த்ர'த்த உபதேஶம் செய்தார். சூடிகையான வேங்கடநாதனும் வெகு சீக்ரத்தில இதெல்லாத்தையும் கத்துண்டு, தானும் மத்தவாளுக்கு சொல்லிகுடுக்கும் அளவுக்கு பெரிய அறிவாளி ஆனார் - எத்தனை வயஸுக்குள்ள தெரியுமா ; இருபது வயஸுக்குள்ள!

**ஸுமதி :** பாட்டீ ! இனிமே வேங்கடநாதன, ஸ்வாமி தேஶிகன்-னே சொல்லுவோம்; ஸரி பாட்டீ! அவருக்கு கல்யாணம் ஆச்சா? கொழந்தைகள் உண்டா? இதெல்லாம் சொல்லுங்கோ.

(... தொடரும்)

**Sponsorships and donations towards publication expenses are welcome.**








அக்ஷய த்ருதீயை புறப்பாடு





சித்திரை ச்ரவண உத்ஸவம்
கண்டையுடன் கண்டாவதாரர்